# சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் - பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்- அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (21.02.2026 - சனிக்கிழமை) பகல் 12.30 மணியளவில், சென்னை, ஓட்டேரி, எண்.7, செல்லப்பா தெரு உள்ள முகவரியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், மகளிர் மாமன்ற உறுப்பினர்கள், வெல்லும் தமிழ் பெண்கள் தொகுதி பொறுப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

### கரூரில் 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரைக் கூட்டம்!

# துரோகிகளுடன் புறவாசல் வழியாக வரும் பா.ஜ.க.வின் எண்ணம் நிறைவேறாது!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் – தயாநிதி மாறன் எம்.பி. பேச்சு!

கரூர், பிப். 21 –

கரூர் மாவட்டம், கரூர் சட்டமன்ற தொகுதியில், திராவிட மாடல் நல்லாட்சியின் மகத்தான சாதனைகளை பறைசாற்றும் 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரை கூட்டம், கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. மாநகர செயலாளர் எஸ்.பி. கனகராஜ் வரவேற்புரையாற்றி னார். கரூர் மாவட்ட கழக செயலாளர், மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ தலைமை வகித்து பேசினார். கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. சிறப்புரையாற்றினார். அவர் பேசியதாவது:

செந்தில் பாலாஜியின் ஆற்றலை 2019 நாடாளுமன்றத் தேர்தலில் பார்த்தோம். கொங்கு மண்டலத்தில் வெற்றி பெற வேண்டும் என தலைவர் அவர்கள் கட்டளையிட்டார்கள். தேர்தல் முடிவை எதிர்பார்த்து,



கொரோனா காலம் தலைவர் அவர்களின் வீட்டில் அனைவரும் முக கவசம் அணிந்து அமர்ந்திருந்தோம். செந்தில் பாலாஜி வந்தார். நாம்தான் வெற்றி பெறுவோம் என உறுதி அளித்தார். அதன் பிறகு ஈரோடு இடைத்தேர்தல். அங்கு தான் செந்தில்பாலாஜியின் பணிகளை நேரில் பார்த்தேன். மிகவும் டப் என்றார்கள். ஆனால் தூங்காமல் வேலை செய்து வெற்றிக்கனியை பறிக்க செயல்பட்டார். தேர்தல் வேலை என்று வந்துவிட்டால் தூங்கவே மாட்டார்.

அவருக்கு எதிரியே பங்காளிகள் தான். எடப்பாடியோ நான்தான் பெரியவன். நான்தான் கட்சி, நான்தான் முதல்வர் என்ற எண்ணத்தில் அனைவரையும் மிரட்டிப் பார்த்தார். கழகம் வெற்றி பெற்றதைப் பொறுக்க முடியாமல், சீப்பை ஒழித்து வைத்து விட்டால் கல்யாணம் அன்று விடும் என்று நினைத்து எடப்பாடி, பாஜக மூலம் என்னென்ன அட்டூழியங்களை செய்ய முடியுமோ, அத்தனையையும் செய்து செந்தில் பாலாஜியை முடக்கினார். ஆனால் நான் வெளியே இல்லாவிட்டால் என்ன?. கழக தொண்டர்கள் இருக்கிறார்கள். நான் என்ன நினைக்கிறேனோ அதை அவர்கள் செய்வார்கள் என்று சொல்லி கழகத்திற்கு அமோக வெற்றியைத் தேடித் தந்தார்.

தன்னம்பிக்கை உடையவர்கள் கழகத்தினர். 2026 தேர்தல் களம் வருகிறது பார்க்கலாம் என களம் இறங்கி இருக்கிறார். அவரை முடக்க பார்த்தீர்கள் அல்லவா, இருங்கள். இன்னும் இரண்டு மாதம் தான் இருக்கிறது. கொங்கு மண்டலத்தை கழகத்தின் கோட்டையாக மாற்றி காட்டுவார். சில சமயம் கெட்டவர்கள் ஜெயிப்பதை போல தோற்றம் இருக்கும். அவர்கள் செய்கின்ற சூழ்ச்சியை பார்த்து அந்த எண்ணம் வரும். ஆனால் தன்னம்பிக்கை உடையவர்கள் தான் வெற்றி பெறுவார்கள். இப்போது பாருங்கள் ஒட்டுமொத்த கொங்கு மண்டலத்தையும் கழகத்தின் கோட்டையாக மாற்றிக் காட்டுவார்.

மகளிர் அனைவரையும் பார்க்கும்போது பொறாமையாக இருக்கிறது. ஆமாம் எங்களுக்கு எதுவும் இல்லை. ஆனால் உங்கள் அக்கவுண்டில் தான் டக்கு டக்கு என காசு வந்து சேர்ந்துள்ளது. ரூ.5ஆயிரம் உங்களுக்கு கிடைத்ததை நினைக்கும் போது பெருமையாக இருக்கிறது. எங்கள் தலைவர் சொன்னார் செய்தார். மக்கள் நம்பக்கூடிய ஒரே தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டா லின் அவர்கள் தான். அவர்களை மீண்டும் ஆட்சியில் அமர்த்த மக்கள் முடிவு செய்து விட்டார்கள். ஆரம்பத்தில் மாதம் தோறும் ரூ. ஆயிரம் கொடுக்க முடியாது என்று சொன்னவர்கள் இப்போது 2000 தருவேன் என்கிறார்கள். ஆனால் சுப்ரீம் கோர்ட்டுக்கு போக பாஜக வக்கீல்கள் முயற்சி செய்தனர். மோடியும், அமித்ஷாவும் இந்த முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதை அறிந்து 11 மணிக்கு தானே கோர்ட்டுக்கு போவாய். எட்டு முப்பது மணிக்கு அக்கவுண்டில் பணத்தை போடுகிறேன் என செய்து காட்டியவர். மு.க. ஸ்டாலின் அவர்கள் என்றால் சும்மாவா, யார் என்று தெரிகிறதா?.

இந்தத் திட்டத்தை கிண்டல் செய்துவிட்டு பா.ஜ.க.வினர் அவர்கள் ஆளும் மாநிலங்களில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**திருட முடியாத ஒரே சொத்து!**

வஞ்சகம் சூழ்ச்சி செய்து எப்படியாவது தமிழ்நாட்டை பிடித்து விட வேண்டும் என முயற்சி செய்கிறார்கள். அவர்களுக்கு தேவை அடிமைகள் . துரோகத்தால் வெற்றி பெறலாம் என நினைக்கிறார்கள் நடக்காது. துரோகத்தால் தோல்வியடைந்த எடப்பாடி பாஜகவுடன் கூட்டணி இல்லை என்று கூறினார். சிறுபான்மை மக்களுக்கு எதிரான அனைத்து சட்டங்களையும் ஆதரித்து விட்டு அவர்களிடம் போய் மன்னிப்பு கேட்டார் ஆனால் மக்கள் தேர்தலில் வீழ்த்தினார்கள்.

வஞ்சகம் சூழ்ச்சி என எப்படியாவது தமிழ்நாட்டை பிடிக்க வேண்டும் என ஓடி வந்து முயற்சிக்கி ன்றார்கள் அவர்களுக்கு தேவை அடிமைகள். துரோகம் இருந்தால் போதும் வெற்றி பெற்று விடலாம் என நினைக்கிறார்கள். அது நடக்காது.

இவ்வாறு தயாநிதி மாறன் பேசினார்.



சென்னை மாநகராட்சியின் 2026–27ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் மேயர் ஆர்.பிரியா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நெல்லை மஸ்தான்
### பிப்ரவரி 21 (1984)



தொடக்க காலம் முதலே அய்யா – அண்ணா – தலைவர் கலைஞர் வழியில் தமிழர் நலம் நாடி உழைத்த தோழர் மஸ்தான் காட்சிக்கு எளியவர்; கழகமே உயிர் மூச்சென வாழ்ந்தவர். கழகப் பணிகளில் படிப்படியாக முன்னேறியவர்.

நெல்லை நகரச் செயலாளர், நெல்லை மாவட்ட துணைச் செயலாளர் என பல பொறுப்புகளை வகித்து இறுதியில் நெல்லை மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றினார்.

கழகப் பணியாற்றும்போதே தொழிற் சங்கப் பணிகளிலும் தீவிரம் காட்டியவர். தொ.மு.ச. பேரவைச் செயலாளராகவும் செயல்பட்டவர்.

"நெல்லைச் சீமையில் கழகத்திற்குக் கிடைத்த வைரமணி விளக்கு என் அன்புத் தம்பி மஸ்தான்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் இன்று (21–ஆம் தேதி)

# "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" வீடு வீடாக பரப்புரைக்காக சட்டமன்றத் தொகுதி வாரியாக பயிற்சி கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு பெண்களுக்கான 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்'– 'விடியல் பயணம்' – 'தோழி விடுதிகள்' – 'புதுமை பெண் திட்டம்' உள்ளிட்ட பல்வேறு மகளிருக்கான நலத்திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி – இது மகளிருக்கான ஆட்சி என அனைவரும் பாராட்டும் வண்ணம் இந்த அற்புதமான ஆட்சி நடைபெற்று வருகிறது.

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்று நிறைவேற்றிய அடுக்கடுக்கான சாதனை திட்டங்களால் தமிழ்நாட்டில் உள்ள பெண்கள் – வெல்லும் தமிழ் பெண்களாக உயர்ந்துள்ளனர்.

"பெண்களின் முன்னேற்றமே தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றம்" எனும் கொள்கை உறுதியுடன் மகளிருக்காக திராவிட மாடல் நல்லாட்சியில் நிறைவேற்றியுள்ள எண்ணற்ற பல திட்டங்களையும், சாதனைகளையும், தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் மகளிரிடம் எடுத்துச் சென்று சேர்த்திட வேண்டும் என்ற நல்ல நோக்கில்,

நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும், நம்முடைய உயிரினும் மேலான பாசமிகு அன்புத் தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அன்புக் கட்டளைக்கு இணங்க, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக வெல்லும் தமிழ் பெண்கள் வீடு வீடாக பரப்புரை செய்வதற்காக பயிற்சிக் கூட்டங்கள். இன்று 21–ஆம் தேதி நடைபெற உள்ளது.

| சட்டமன்றத் தொகுதி | தலைமை | நேரம் மற்றும் இடம் | பயிற்சி அளிக்கும் மகளிர் தொகுதி பொறுப்பாளர் |
|---|---|---|---|
| திருப்போரூர் தொகுதி | மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் | காலை 9.00 மணி புருனோ பேலஸ் கோவளம் | ச. சசிகலா மாவட்ட மகளிர் தொ. அணி அமைப்பாளர் |
| திருப்பெரும்புதூர் தொகுதி | மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் | காலை 11.00 மணி தில்லை மகால் படப்பை | சங்கீதா வேலு, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் |
| ஆலந்தூர் தொகுதி | மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் | பிற்பகல் 3.00 மணி மாவட்ட கழக அலுவலகம் ஆலந்தூர், கத்திப்பாரா | கீதா ஆனந்தன் பொதுக்குழு உறுப்பினர் |
| பல்லாவரம் தொகுதி | மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி MLA | காலை 9.00 மணி விதூர் மகால் 200 அடி சாலை பல்லாவரம் | மதினா பேகம் மாநகராட்சி மன்ற உறுப்பினர் |
| தாம்பரம் தொகுதி | தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்,ராஜா MLA | காலை 9.00 மணி பாத்திமா சமுதாய கூடம், கிழக்கு தாம்பரம் | ஆர்.எஸ்.கிருத்திகா தேவி கழக மருத்துவர் அணி துணை செயலாளர் |
| செங்கல்பட்டு தொகுதி | மாவட்ட துணை செயலாளர் வரலட்சுமி மதுசூதனன் MLA | காலை 9.00 மணி பாலாஜி ஆடிட்டோரியம் கொளப்பாக்கம் | உதயா கருணாகரன் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் |

அந்தந்த ஒன்றிய – நகர – பகுதி– பேரூர் செயலாளர்கள் அவரவர் ஒன்றிய – நகர – பகுதி – பேரூர்களில் உள்ள பூத்களில் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள அந்தந்த பூத் மகளிர் குழுத் தலைவர்களையும், BDA – பூத் IT WING முகவர்களையும், 10 பூத் ஒருங்கிணைபாளர்களையும், மாநகர – ஒன்றிய – நகர – பகுதி– பேரூர் மகளிர் அணி நிர்வாகிகளையும் தவறாமல் அழைத்து வந்து அந்தந்த சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் "வெல்லும் தமிழ் பெண்கள்" பயிற்சி கூட்டத்தில் அவசியம் பங்கேற்க செய்ய வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் – திருவொற்றியூர் கிழக்கில்

# வெல்லும் தமிழ்ப் பெண்கள் பிரச்சார பயிற்சிக் கூட்டம்!

## கலாநிதி வீராசாமி – கே.பி.சங்கர் முன்னிலை! தி.மு.தனியரசு எம்.சி. அறிக்கை!

*சென்னை, பிப்.21-*

*சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர், 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு அறிக்கை வருமாறு :-*

*சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர், திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் தி.நகர் எஸ்.மோகன் ஆகியோரின் முன்னிலையில் இன்று (21.02.2026 - சனிக்கிழமை) காலை 9.00 மணிக்கு கங்கா ஜெயராஜ் திருமண மாளிகையில் திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்கான வெல்லும் தமிழ் பெண்கள் பிரச்சார பயிற்சிக் கூட்டம் நடைபெற உள்ளது.*

*இதில் மாநில மகளிர் அணி இணை செயலாளர் குமரி விஜயகுமார், மாநில சமூக வலைதள பொறுப்பாளர் டாக்டர் பி.எம். யாழினி ஆகியோர் பயிற்சி அளிக்க உள்ளனர்.*

*ஆகையால் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட பகுதி, வட்ட மகளிர் அணி நிர்வாகிகள், மாவட்ட பகுதி வட்ட அணியின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கும் படி அன்புடன் கேட்டுகொள்கிறேன்.*

*இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளரும் 1வது மண்டலக் குழுத் தலைவருமான தி.மு.தனியரசு கேட்டுக் கொண்டுள்ளார்.*

### ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# முதல்வர் பிறந்தநாள்! 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. – கலாநிதி வீராசாமி எம்.பி. வழங்குகின்றனர்!

*சென்னை, பிப். 21-*

*மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. நிகழ்ச்சி ஏற்பாட்டில் கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா பொது.ராஜா தலைமை, இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் முன்னிலையில்: ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., கலாநிதி வீராசாமி எம்.பி. ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்குகின்றனர்.*

*மார்ச் 1 கழக தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில், 43வது வட்ட செயலாளர் பொ.து.இராஜா தலைமையில், பகுதி கழக செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் முன்னிலையில், வார்டு-43 ஆதிதிராவிடர் சாலையில் 21.02.2026 இன்று மாலை 4.00 மணியளவில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டு 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்ககிறார்கள்.*

*மேலும் இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் ஆர்.வெற்றி வீரன், மாநில வழக்கறிஞர் அணி துணை செயலாளர் என்.மருது கணேஷ், மண்டலக்குழு தலைவர் நேதாஜி.யு.கணேசன், பகுதி நிர்வாகிகள், என். அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், மாஸ்ட்.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், திராவிடச்செல்வி, பி.ஸ்ரீனிவாசன், மாவட்ட அமைப்பாளர்கள்: ஏ.டி.மணி, விமலா, வி.வி.ரமேஷ், எஸ்.எம்.பரசுராமன், மோகன், ஒளிஒலி பாபு, கலைவாணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள்: இர.பொன்இளவரசன், வெ.சு.சத்தியநாராயணன், இ. ரவிக்குமார், வை. கௌதமன், லயோலா.கே. மதன், கட்பீஸ்.ப.சோமசுந்தரமூர்த்தி, வட்ட செயலாளர்கள்: ஜெ.பிரேம் ஆனந்த், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜ், ப.குமார், சா.தமிழ்செல்வன், எஸ்.எல்.சுந்தர், கி.தேவன், ஆர்.ஏ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, ஆர்.ராஜன், மாமன்ற உறுப்பினர்கள்: திருமதி.பவித்ராநரேஷ்குமார், குமாரி நாகராஜன், தேவி கதிரேசன், இ.மணிமேகலை, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் S.ஹரிஷ்குமார், கார்த்திக் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*இந்நிகழ்ச்சியில் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜி.சரத்குமார் நன்றி கூறுகிறார்.*

# தி.மு.க. சட்டத்துறையால் நியமிக்கப்பட்ட தென்மண்டலம் 1, 2 உள்ளடக்கிய மண்டல பொறுப்பாளர்கள் மற்றும் DLC, CLC, TLC, ULC, DivLC, FLCகளுக்கான ஆலோசனைக் கூட்டம்!

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிக்கை!

தி.மு.க. சட்டத்துறை மாநில நிர்வாகிகள், தென்மண்டலம்1, தென்மண்டலம்2 ஆகிய மண்டலப் பொறுப்பாளர்கள் மற்றும் இந்த இரண்டு மண்டலத்திற்குட்பட்ட DLC, CLC, TLC, ULC, DivLC, FLCகளுக்கான ஆலோசனைக் கூட்டம் இன்று (21.02.2026 - சனிக்கிழமை) காலை 9.00 மணி அளவில், மதுரை, உத்தங்குடி, "JFA லக்கி பேலஸ்" தி.மு.க சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ அவர்கள் தலைமையில், கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் - துணைச் செயலாளர்கள் - தலைமைக் கழக வழக்கறிஞர்கள் ஆகியோர் கலந்து கொள்ள நடைபெறும்.

இக்கூட்டத்தில் தி.மு.க. சட்டத்துறையால் நியமிக்கப்பட்ட தென்மண்டலம்1, தென்மண்டலம்2 ஆகிய மண்டலப் பொறுப்பாளர்கள் மற்றும் இந்த இரண்டு மண்டலத்திற்குட்பட்ட DLC, CLC, TLC, ULC, DivLC, FLCஅனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் :** எதிர்வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தல் குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
**சென்னை18.**
**நாள்: 20.02.2026.**

**என்.ஆர்.இளங்கோ, எம்.பி.,**
**செயலாளர்,**
**தி.மு.க. சட்டத்துறை**